வன்னிநகர்

# புனித அந்தோனியார் ஆலயம்

## வரலாறும் வளர்ச்சியும்

செல்வி வேர்ஜினெற் லொறென்ரீனா அலோசியஸ்

தலைப்பு:
# வன்னிநகர் புனித அந்தோனியார் ஆலயம் வரலாறும் வளர்ச்சியும்

பெயர்:
செல்வி வேர்ஜினற் லொறென்ரீனா அலோசியஸ்

பதிவு இலக்கம்; 92/ A/ 117 கட்டிலக்கம்:

ஆண்டு: கலை முதலாண்டு

வெளிக்கள ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை

கிறீஸ்தவ நாகரீகத்துறை கலைப் பீடம்

யாழ்/ பல்கலைக்கழகம்

1994



வன்னி நகர்
புனித அந்தோனியார் ஆலயத்தில்
எழுந்தருளியிருக்கும்
புனித அந்தோனியாரின் திருச் சுருபம்

## சமர்ப்பணம்

***



யோசவ்வாஸ் முனிவர்

பலதரப்பட்ட சொல்லொணாத் துன்பங்கள் மத்தியில்
தம்மை முழுமையாக அர்ப்ணித்து வன்னிப் பிரதேசத்தில்
இறைபணியாற்றி இறைவனடி சேர்ந்த ஆயர்கள் குருக்களுக்கு
இம்மலர் சமர்ப்பணம்

***



மன்னார் மறை மாவட்ட ஆயர்

மேதகு பேரருட் கலா. இராயப்பு யோசப் ஆண்டகை.

# முன்னுரை

வன்னிப் பிரதேசத்தில் இறம்பைக்குளம் நகரில் முந்நூறு வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கோடி அற்புதரான, புனித அந்தோனியார் ஆலயம் ஆஅருள் பரிபாலித்து வருவதை எல்லோரும் அறிவார்கள்.

02. சிறப்புடைய இவ்வாலய வரலாற்றை ஆய்வுக்காக எனக்குக்கிடைத்-ததையிட்டு இறைவனைத் துதிக்கின்றேன். இவ்வாய்வுக்கட்டுரைக்கு எனக்கு அடித்தளமிட்ட பேராசிரியர் கலாநிதி அருட்திரு.சந்திரகாந்தன் அடிகளா-ருககு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. இவ்வாய்வுக்கட்டுரையை நான் எழுதுவதற்குத் துணையாகப் பயன்-பட்டவை;

" யோசவாஸ் முனிவரின் சரிதம் (அருட்திரு.ம.பாவிலுப்பிள்ளை)

" புனித அந்தோனியார் ஆலய நூற்றாண்டு மலர்"

இவைகளை ஆக்கியோருக்கு எனது கடப்பாடான நன்றி உரித்தாகுக.

04. தேவையான விடயங்களுக்கெல்லாம் விபரங்களைத் தந்துதவிய பங்குத் தந்தை அருட்திரு.எ.பி.தேவசகாயம் அடிகளாருக்கும் ஏனைய குருக்க-ளுக்கும் திருக்குடும்பக் கன்னியர்களுக்கும் வன்னி வாழ் பெரியோகர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

05. இந்நூலுககுரிய தகவல்களைப் பெற்றுத் தந்த எனது சகோதரி திருமதி.எல்.ஜி.சத்தியநாதன், ஒழுங்குபட அமைவதற்குதவிய எனது தந்தை திரு.எஸ்.ப்.அலோசியஸ், திறந்த முறையில் தட்டச்சு செய்து தந்துதவிய எனது ஆசிரியை திருமதி.குணநாயகி ஞானசுப்பிரமணியம், புத்தகம் அமைத்-தற்குரிய நியூ வன்னி குயிக் பிரின்டஸ் ஆகியோருக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**செல்வி.வேர்ஜினத் லொறன்ரீனா அலோசியஸ்.**

உள்ளே.........

| | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 01. | வன்னி நகர் | 01 |
| 02. | போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்க சமயம் | 02 |
| 03. | யோசவாஸ் முனிவர் | 03 |
| 04. | வவுனியாவில் கத்தோலிக்க சமயம் | 06 |
| 05. | புனித அந்தோனியார் ஆலயம் | 07 |
| 06. | யோசவாஸ் முனிவர் காலக் குருக்கள் | 09 |
| 07. | கோவில் இடமாற்றமும் பணி செய்த குருக்களும் | 12 |
| 08. | புனித அந்தோனியார் பெருவிழா | 14 |
| 09. | வவுனியாவுக்குத் திருக்குடும்பக் கன்னியர் வருகை | 15 |
| 10. | புனித அந்தோனியார் ஆரம்பப் பாடசாலை | 17 |
| 11. | வவுனியா பங்கில் பக்திச் சபைகளும் மன்றங்களும் | 20 |
| 12. | வவுனியா பங்குக் குருமனையும் ஏனைய கட்டடங்களும் | 25 |
| 13. | நூற்றாண்டு விழாக் கண்ட ஆலயம் | 28 |

# வன்னி நகர்

## புனித அந்தோனியார் ஆலயம்.

### வன்னி நகர்:

காப்பியங்கள் கூறும் முல்லை, மருதம், நெய்தல், பாலை, குறிஞ்சி என்னும் ஐவகை நிலங்களைக் கொண்டுள்ளது எமது நாடு. இதில் முல்லை, நெய்தல் ஆகிய இரு வகை நிலப்பரப்பையுடையது வன்னி நாடு. காலப்போக்கில் காடுகள் அழிக்கப்பட்டுக் கழனிகளாயின. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைக் கொண்டுள்ளது வன்னி. வரட்சி மிகுந்திருப்பினும் வெப்பத்தை வற்றச் செய்யும் முன்னூறுக்கும் அதிகமான வளமான குளங்களை இப் பிரதேசம் கொண்டுள்ளது. குளங்களின் பெயர்களைக் கொண்டே கிராமங்களைப் பெயர் சூட்டியுள்ளனர்.

இக் குளங்களைச் சூழ்ந்து கழனிகள், கழனிகளைச் சூழ்ந்து குடிமனைகள். முழுக்க முழுக்க விவசாயத்தையே தம் தொழிலாகக் கொண்டு இப்பிரதேச மக்கள் வாழ்ந்தனர். அத்தோடு பசுவினங்கள், எருமைகள் கொண்ட பண்ணைகளையும் வைத்திருந்தனர். பாலும், தயிரும், வெண்ணையும் நிறைவாகப் பெற்றனர். மா, பலா, தோடை, எலுமிச்சை, தென்னை, கமுகு, வாழை போன்ற கனி தரும் மரங்கள் நிறைந்த சோலைகளும் வைத்திருந்தனர். தேனுக்கு இப்போதும் குறைவில்லை. பண்ணைபோன்றில்லாவிடினும், பெருமளவில் கோழிகளும் ஒவ்வொரு இல்லங்களிலும் வளர்த்தனர். மான், மரை, பன்றி, முயல், காட்டுக்கோழி இறைச்சிக்குப் பெயர் பெற்றது வன்னிநாடு. "வந்தோரை வாழவைக்கும் வன்னிவளநாடு" என்று கூறும் போது விருந்தோம்பலின் சிறப்பு மிளிர்கிறது மாத்திரமல்ல மக்களின் பண்புகளையும் பிரதிபலிக்கின்றது.

### வன்னியர்:

இப் பிரதேசம் வன்னியர் ஆண்டமை காரணமாக வன்னி என அழைக்கப்படுகின்றது. வன்னியை ஆண்ட மன்னர்களை "வன்னியர்", "வன்னியனார்" என அழைக்கப்பட்டனர். இவ்வினத்தவர் சோழப் பேரரசுகளின் படையமைப்பில் பெரும் இடம் பெற்றவர்கள். இவர்களின் வரலாறு பற்றிச் சில

ஒல்லாந்தர் ஆட்சியில்:

ஒல்லாந்தர் 1658ல் நாட்டின் அதிகாரிகளினதும், போத்துக்கேயர் திரும்பி வந்தால் இலங்கையின் கறுவா வியாபாரம் பறிபோய்விடுமென்ற பயமே, அவர்களின் ஆட்சியோடு ஒன்றாகிவிட்ட சத்திய வேதத்தை நிர்மூலமாக்கிவிடத் தூண்டியது. நமது நாடு ஒரு தீவானபடியால் அது சாதிக்கக்கூடியதென்று துணிந்தனர். எனவே, இரக்கமின்றிக் கத்தோலிக்கரை அழிக்கத் தொடங்கினர். முதற் கட்டமாக ஆயர்கள், குருக்களை நாடு கடத்தினர். கத்தோலிக்க மக்கள் அலைப்புண்டார்கள். அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். எங்கும் அவர்களின் இரத்தம் வெள்ளக்காடாகக் காட்சியளித்தது. கத்தோலிக்க மக்கள் தலைகாட்ட முடியாது தவித்தனர். பயந்து நடுங்கிப் பதுங்கி ஒளிந்து வாழ்ந்தார்கள். எங்கும் வேத கலாபனை, கோவில்களைத் தங்கள் தேவைகளுக்காகப் பறிமுதல் செய்தனர். உத்தியோகத்திலிருந்த கத்தோலிக்கர் விலக்கப்பட்டு எளியவராக்கப்பட்டனர். கத்தோலிக்க மதத்துக்காகப் பலர் உயிர் துறந்தார்கள். மன்னார், மாந்தை முழுமையாகத் தாக்கப்பட்டது. அதனால், அப் பகுதியை இப்போதும் "வேத சாட்சிகள் நாடு" என அழைக்கிறார்கள். வன்னிப் பிரதேசத்து மக்களும் குடா நாட்டிலுமுள்ள பல கத்தோலிக்க மக்கள் கால் நடையாக காடுகள் வழியாகக் கண்டிக்குச் சென்றார்கள். கண்டி அரசுடன் அப்பொழுது ஒல்லாந்தர்களின் உறவு தெறித்திருந்ததால், அவன் தனது இராச்சியத்தில் கத்தோலிக்கருக்கு அபயமளித்தான். ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்ட பிரதேச கத்தோலிக்க மக்கள், தம்மை இனங்காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்ததோடு, எப்படியும் குருக்கள் மீண்டும் வருவார்கள் என்று காத்திருந்தனர்.

யோசவாஸ் முனிவர்:

இலங்கையில் குறிப்பாக வன்னிக் குடாநாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேத கலாபனைகளைக் கோவையிலுள்ள ஆயர்களும் குருக்களும் அறிந்து மிகவும் வேதனை கொண்டனர். யேசுவாசின் காதுகளிலும் இவ்விடயம் எட்டியது. இலங்கைத் தீவிலுள்ள கத்தோலிக்க மக்களுக்கு எவ்வாறு உதவலாம் என்று சிந்தித்தார். செபித்தார். இலங்கையிற் கலாபனையோ கனலானது; காவலோ கடாற்கையானது. உயிரை வேண்டாமென்றால்தான் அங்கு போகத் துணியலாம் என்று தோன்றியது. இறுதியில் துணிவு கொண்டார். கோவையில் ஞான ஆட்சி புரிந்து ஆலோசனைச் சங்கத்-

நாரை அணுகினார். அவர்கள் அடிகளாரை ஆபத்து நிறைந்த இலங்-கைக்கு அனுப்ப மறுத்து, சிக்கலான நிலையிலிருந்த கன்னட நாட்டுக்கு அனுப்பினர். அதைப் பணிவுடன் ஏற்றுச் சென்றார். கன்னட தேச அனுபவம், இலங்கையில் அப்போஸ்தவ வேலைக்கு உசிதமாயுதவியதென்பது அவர் வரலாற்றில் தெரிய வருகிறது.

ஒல்லாந்தரின் தொல்லைகள் இங்கு மாத்திரமன்றிக் கொச்சின்-கொல்லம், கிறங்கனூர், நாகபட்டணம் போன்ற இடங்களிலும் இடம் பெற்றன. யோசவாஸ் அடிகளார் கன்னட நாட்டிலிருந்து மலையாளத்-துக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் தமிழை நன்கு கற்றுத் தேறினார். இதனால் இலங்கையில் இறைபணி புரிய அடிகளாருக்கு இலேசாக இருந்தது.

குருக்களைத் துரத்தி கத்தோலிக்கரைத் துன்புறுத்துவதை நேரில் கண்டனுபவம் பெற்றவர்கள் யோசவாஸ் முனிவர் இலங்கை போய்ச்சேரு-வதற்கு உபாயங்கள் சொல்லிக் கொடுத்தனர். குருவுக்கு உரிய உடையை விட்டுக் காவியுடை தரித்துச் செல்லுமாறு கொம்பனி அடிமைகள் அணியும் அங்கியொன்றையும் அளித்தார்கள். அது முனிவரின் வறுமைக்கும் எளிமைக்-கும் பொருத்தமாயிருந்தது. இக்கோலத்தில் பயணத்தைத் தொடர்ந்து 1687 பங்குனி முடிவில் தூத்துக்குடி வந்து சேர்ந்தார். அங்கு கத்தோலிக்க குரு என்று அடையாளங்காணப்படாமையால், அனுமதிபெற்று கடலில் சூறாவளி கொந்தளிப்பு, பசி பட்டினியாகிய பல துன்பங்களை அனுபவித்து மூன்று கிழமையின் பின் மன்னார் தீவுக்கு வந்தார்.

யோசவாஸ் முனிவர் வனாலி என்ற ஊரில் 1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை பிறந்தார். இவர் தந்தையார் கிறிஸ்தோபர்வாஸ். தாயார் மரியாதே மிராண்டா. இளவயதிலே கல்வியும் சமயத்திலும் ஊக்கமுள்ளவராயிருந்தார். இவர் திருச்சபையின் ஊழியத்திற்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். இவர் ஒரு பிராமணர். 1678ம் ஆண்டு கத்தோலிக்க சபைக் குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டார். கைவிடப்பட்டவர்களுக்குக் கைங்கரியம் செய்-வதே இவரது முக்கிய குறிக்கோளாகும். மக்களுக்கு வேத உண்மைகளை உபதேசித்துப் பாவமன்னிப்பு, திருமுழுக்கு, மெய் விவாகம் போன்ற அருட்சாதனங்களை வழங்கினார். தாம் தரித்துச் செல்லும் இடங்களில் சிலுவைகளை வைத்துச் சிறு கோவில்கள் அமைத்தார். 60 வயது வரை வாழ்ந்த இம்முனிவர் 35 ஆண்டுகள் குருவாகத் திகழ்ந்தார்.

/...5

அதில் 24 வருடங்களை - 1711 தை மாதம் 16ந் தேதி - இறைவனடி சேரும்வரை இலங்கையிலே இறைபணி புரிந்தார்.

1687 சித்திரையில் மன்னார் தீவுக்கு வந்திறங்கிய யோசவாஸ் அடிகளார் யாழ்ப்பாணம் சென்று சில்லாலை என்னும் ஊரில் அளப்பரிய கஸ்டங்கள் மத்தியில் இறைபணியாற்றி, தொடர்ந்து அங்கு இருக்கமுடியாத நிலையில் மறைந்து ஒழிந்து பூநகரியை வந்தடைந்தார். அங்கிருந்து புத்தளம் பயணமானார். செம்பன்குண்டு, சுண்ணாவில், பள்ளங்கண்டல், பல்லவராயன்கட்டு, வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, விடத்தற்தீவு, மாந்தோட்டம், நானாட்டான், அரிப்பு, முசலி, மறிச்சுக்கட்டி, குதிரைமலை, இலவங்குளம், வண்ணாத்திவில்லு போன்ற இடங்களைக்கடந்து புத்தளம் அடைந்தார். அங்கிருந்து கண்டி சென்றார். கண்டியில் சேவை-யாற்றிய காலத்தில் சிறை பிடிக்கப்பட்டார். அங்கு அவரும் அவர் உதவியாளர் யுவாமும் சிறைச்சாலைக் காவலர்களிடம் சிங்களம் கற்றனர். இதனால் சிங்கள மக்களிடையேயும் இறைபணி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. சிறையிலிருந்து விடுதலையானதும் சில காலங்களின் பின்பு மீண்டும் மன்னார் வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்று மறைபோதகம் செய்து மக்களை மனந்திருப்பினார்.

<u>வவுனியாவில் யோசவாஸ்:</u>

ஆட்சியாளர் முன் மறைந்த வாழ்க்கை மூலம் கத்தோலிக்கர்களுக்குக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, மாறுவேடத்தில் ஒரு இரப்பனாக வந்த யோசவாஸ் முனிவர் யுவாம் என்னும் உதவியாளனுடன் மாந்தையி-லிருந்து திருகோணமலைக்கும் புத்தளத்துக்கும் செல்லும் வழியில் வவுனியா இறம்பைக்குளத்தில் பூதநாதர் என்பவர் வீட்டில் தங்கியிருக்க நேர்ந்தது. பூதநாதரின் மனைவி அசுத்த ஆவியால் பீடிக்கப்பட்டு, ஆடையின்றி ஓடுவதும், அபயச் சத்தமிடுவதுமாக நோயுற்றிருந்தார். முனிவர் இதைக்கண்ணுற்று அவள் மேல் சிலுவை அடையாளமிட்டு, செபித்து மந்திரித்த புனித நீரால் ஆசீர்வதித்து விட்டு அவர்கள் வீட்டுக்கூரையில் சிலுவை ஒன்றைச் செருகி-விட்டுத் திருகோணமலைக்குத் தம் பிரயாணத்தைத் தொடர்ந்தார். மீண்டும் திரும்ப வருவதாகவும் சொல்லிச் சென்றார். பூதநாதரின் மனைவி அற்புதமாகக் குணமடைந்ததைக் கண்டு அனைத்து மக்களும் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

அத்தோடு, அப்போது நிலவி வந்த சாபக்கேடான பல குறை- களையும் தெரிவித்தனர். ஒவ்வொரு குடும்பத்திலும் முதலில் பிறக்கும் தலைச்சன் பிள்ளைகள் எதுவித காரணமுமின்றி இறந்து போதல், பருவம் எய்தும் பெண்கள் சிலர் மூக்கிலிருந்து இரத்தம் வடியக் காணப்பட்டு இறத்தல், அடிக்கடி இரத்த நோயால் பீடிக்கப்படல் போன்றவையாகும்.

இறைவனை நோக்கி செபத்தில் ஈடுபட்ட முனிவர் இறம்பைக்குளத்- திலுள்ள புளியமரமொன்றில் இரு சிலுவைகளையும், வயல் வெளியிலுள்ள ஒரு மரத்தில் ஒரு சிலுவையையும், மாமடு வீதியிலுள்ள அலைகரைவெளி என்னும் இடத்தில் மேலும் ஒரு சிலுவையையும் நாட்டினார். ஞாயிறு வாரத்தில் மக்கள் எல்லோரும் கூடியிருந்து வழிபாடுகள் செய்யும்படி பணித்திருந்தார். மக்களும் அவ்வாறு செய்ய ஆரம்பிக்கவே மேற்கூறிய மரணங்கள் ஒழிந்து போயின எனத் தெரிய வருகின்றது.


<u>வவுனியாவில் கத்தோலிக்க சமயம்:</u>

யோசவாஸ் முனிவர் மன்னார், யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, நீர்கொழும்பு, நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகிய தீவுகள் யாவும் பிரயாணம் செய்ததாக அவர் பற்றி எழுதிய நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் 1694ல் வவுனியாவிற்- கும் தனது இறைபணியைச் செய்துள்ளார்.


திருகோணமலைக்குப் போகுமுன் வவுனியாவில் இறம்பைக்குளத்தில் பூதநாதர் வீட்டில் தங்கிச் சென்ற யோசவாஸ் அடிகளார் மாந்தைக்குச் செல்லும் வழியில் மீண்டும் பூதநாதர் வீட்டில் வந்து தங்கினார்.

அன்றுதான் கிறிஸ்து சமயம் வவுனியாவில் உதயமான நாளாகும். பல வருடங்களாக ஒருவராலும் குணப்படுத்த முடியாத பூதநாதரின் மனை- வியின் நோய், முனிவரினால் பூரணமையாகக் குணமடைந்து, பூரண சுகம் பெற்று, தன் இல்லக் கடமைகளைத் திறம்பட நிறைவேற்றும் நற்பெண்மணி- யாகத் திகழ்ந்த அதிசயத்தை வியந்த மக்கள் முனிவரின் வருகையை ஆவ- லுடன் எதிர்பார்த்திருந்தனர். அவர் வந்ததும் மக்கள் அவரைச் சூழ்ந்து வாழ்த்திப் போற்றினர். தாமும் கத்தோலிக்க மதத்தைத் தழுவ இருக்- கும் ஆவலையும் வெளிப்படுத்தினர். முனிவரின் தூய உள்ளமும், ஒளிமிக்க வதனமும், சொல்லும் செயலும் ஒன்றான தன்மையும், எல்லாவற்றிற்கும் மேலாக மனித உயிர்களில் கொண்ட பேரன்பும், பரிவும் -

புனித அந்தோனியார் ஆலயம், வவுனியா



அன்று



இன்று

"சம்மனசு சுவாமியார்" என அழைக்கும் நிலைக்கு உயர்த்தின. முதலில் பூதநாதர் குடும்பம் திருமுழுக்குப் பெற்றுக் கத்தோலிக்க சமயத்தை ஏற்றுக் கொண்டனர். திருமுழுக்கின்போது பூதநாதருக்கு அந்தோனி பூதநாதர் எனப் பெயர் கொடுக்கப்பட்டது. இக் குடும்பத்தைத் தொடர்ந்து அனேகர் திருமுழுக்குப் பெற்று சத்திய மறையில் சேர்ந்தனர். இறம்பைக்குளம், எல்லப்பர் மருதங்குளம், தச்சன்குளம் போன்ற கிராம மக்கள், இந்து மதத்தைவிட்டுக் கத்தோலிக்கராகத் திருமுழுக்குப் பெற்ற-னர். அத்தோடு கத்தோலிக்க மக்களிடையே தங்களுடைய திருமணங்களை தேர்ந்து கொண்டு வாழ்ந்தனர்.

## வவுனியா புனித அந்தோனியார் ஆலயம்:

யோசவாஸ் முனிவர் தமது தொண்டுக்குரிய நிலையங்களுள் வவுனி-யாவை ஒன்றாகக் கருதினார். அதனால் மனம் திரும்பிய அந்தோனி பூதநாதரின் இல்லத்தில் பல தடவைகள் தங்கி அருட்சாதனங்களை நிறை-வேற்றினார். யோசவாஸ் அடிகளார் தங்குவதற்கென ஆயத்தம் செய்யப் பட்ட ஓலைக் கொட்டிலில் பலிப்பூசை நிறைவேற்றிப் போதகமும் செய்-தார். இக் கொட்டில்தான் புனித அந்தோனியார் ஆலயமாக முனிவரி-னால் வவுனியாவில் முதன் முதல் தொடக்கப்பட்ட ஆலயமாகும். அதன் அருகே ஒரு கிணறும் அமைக்கப்பட்டது. அது "கோவில் கிணறு" என்று இப்போதும் ஊர் மக்களால் அழைக்கப்படுகின்றது. இக் கிணறு இன்றுகூட நல்ல நீர்வளத்துடன் காணப்படுகின்றது. முன்னர் ஊர் மக்கள் அனைவ-ராலும் பாவிக்கப்பட்டு வந்த இக் கிணறு இன்று அயலவர்களால் மதில் கட்டப்பட்டு வேலி அடைக்கப்பட்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் பாவித்து வந்த பாதை இதன் மூலம் இல்லாதது போயினவெனினும் கோவில் கிணறு என்ற பெயர் ஆரம்ப கொட்டில் கோவிலை, அது இருந்த நிலை-யத்தை இன்றும் ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கின்றது.

யோசவாஸ் முனிவர் தேவதாயாரிலும் புனித அந்தோனியாரிலும் மிகுந்த பக்தியுடையவரென்பது கண்டியில் அவர் தொடக்கிய புனித அந்தோ-னியார் ஆலய வரலாற்றின் மூலம் விளக்குகின்றது. வவுனியாவில் முதல் கிறீஸ்தவனாக்கப்பட்ட பூதநாதருக்கு, தான் அந்தோனி பூதநாதர் எனப் பெயரிட்டாலும், அவரின் ஒத்துழைப்புடன் ஏனைய மக்களின் உதவியுடனும் ஆலயம் தொடக்கப்பட்டதாலும் ஆலயத்திற்குப் புனித அந்தோனியார் ஆலயமெனப் பெயரிட்டார் போலும்.

புனித அந்தோனியார் வரலாறு:

" பதுவைப் பதியில் பிறந்தவர்
பரிசுத்தமாய் வாழ்ந்தவர்
போதனைகளைப் பொழிந்தவர்
புதுமைகள் பல புரிந்தார்
குழந்தை யேசுவை அணைத்தார்
குன்றென உயர்ந்து நின்றார்
புரிந்த செயல்களால் பரிந்தே
புனிதப் பட்டமும் பெற்றார் ".

போத்துக்கல் தேசத்தில் லிஸ்பன் நகரில் பிறந்தார். பாலப்-பராயத்திலிருந்தே ஞானத்தில் வளர்ந்தார். தேவதாயாரில் விசேஷ அன்பு பூண்டு விளங்கினார். பரலோக பாக்கியத்தை அடையும் பொருட்டு உலகை வெறுத்துப் புனித அகுஸ்தீனார் சபையில் சேர்ந்தார். போதக-ரானார். பதிதரின் சம்மட்டி என்று அழைக்கப்பட்டார். அநேக முறை தீர்க்கதரிசியாகப் பெருங்காரியங்களை முன்னறிவித்தார். குழந்தை யேசுவை ஏந்தும் பாக்கியம் பெற்றார். புதுமைகள் பல செய்தார். அதனால் கோடி அற்புதர் என நாமம் பெற்றார். கடல் மீன்களை அழைத்துப் போதித்தார். விஷங்கலந்த உணவை உண்ணக்கொடுத்தபோது சிலுவை அடையாளமிட்டு உண்டார். கெடுதி ஏதும் ஏற்படவில்லை. கழுதை தேவநற்கருணையை ஆராதிக்கச் செய்தார்.

துன்பப்படுவோருக்குத் துணை செய்பவர். ஆதரவற்றவர்களை அரவணைப்பவர். இறையருளை ஏராளமாகப் பெற்றவர். அவர் மூலம் கேட்கும் வரங்கள் அனைத்தும் கிடைக்கச் செய்பவர். நம்பிக்கையுடன் அவரிடம் அண்டிப்போகும் எவரும் அவரிடம் தம் தேவைகளைப் பெறாமல் போனதில்லை. **அதனால்** பிறசமய மக்களும் திரண்டு அவர் ஆலயத்துக்குப் போவார்கள்.

புனித அந்தோனியார் 1231ம் வருடம் பதுவா நகரில் இறை-பதம் அடைந்தார். அவரது கல்லறையில் அதிக புதுமைகள் நடந்தன. மரித்த ஒரு வருடத்திற்குள் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

யோசவாஸ் முனிவர் காலக் குருக்கள்:

ஏறக்குறைய 40 ஆண்டுகள் மேய்ப்பனில்லா ஆடுகள் போல் சித-றிக் கிடந்த கத்தோலிக்க மக்களைக் காப்பதற்காகத் தன்மை அர்ப்-பணித்த யோசவாஸ் அடிகளார் 1687ம் ஆண்டு இலங்கை வந்து சேர்ந்-தார். தனியான குருவாக இறைபணி தொடர்ந்தார்.

1689ம் ஆண்டு பிரகான்கா சுவாமியார் கொழும்பில் இருந்ததாக அறியக் கிடக்கின்றது.

1697ல் ஆண்டு தியனபந்தி குருக்கள் மூவர் இலங்கை வந்தனர்.

1704ம் ஆண்டு பிரான்சீஸ் தே யேசு அடிகளார் வந்தார்.

1705ம் ஆண்டு ஆவணியில் 4 குருக்கள் மன்னாருக்கு வந்தனர்.

1705ம் ஆண்டு புரட்டாதியில் வன்னியில் 07 குருக்கள் கூடினர்.

அவர்கள் வேலைகளைப் பிரித்துக் கொண்டனர்.

1708ம் ஆண்டு மேலும் இரு குருக்கள் வந்தார்கள். இவர்களுடன் இவ்-ஆண்டு 10 குருக்கள் இருந்தார்கள்.

இங்கு வந்து கடமையாற்றிய குருக்களில் மெல்லோ சுவாமியார் 1706ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். யோசவாஸ் அடிகளாரும் இலங்கையில் 24 ஆண்டுகள் அப்போஸ்தவ கடமையாற்றி 1711ம் ஆண்டு தை மாதம் 16ம் தேதி வெள்ளிக்கிழமை இரவில் இறைபதமெய்தினார். இவரின் இறுதி நாட்களில் அல்மேதா சுவாமியாரும் கொன்சால்வேஸ் சுவாமியாரும் அருகிலிருந்து பணிபுரிந்தனர்.

யோசவாஸ் முனிவருடன் இறுதியாக உரையாடிய மக்களுக்குக் "கடவுளின் அன்பிலும் அச்சத்திலும் சீவியுங்கள்" என ஆசிர்வதித்தார். தாங்களும் வாழ்நாள் முழுவதும் ஞாபகத்தில் வைத்திருக்க ஒரு வசனம் சொல்லும்படி குருமார் கேட்டனர். "சீவிய காலத்திலே அசட்டை செய்ததை மரண வேளையிலே இலகுவிற் செய்ய முடியாது" என சிங்கள மொழியிற் கூறியதாக அறியக் கிடக்கின்றது. பின்பு அவர் "கடவுளின் சித்தப்படி சீவியுங்கள் . மற்றக் குருமாரின் புத்தியைக் கேட்டு நடந்த போதுதான் நான் பிழைகளை விலக்கினேன்" என்று உயர்ச்சியோடு

கூறினார்.

யோசவாஸ் முனிவரின் புனிதமான அப்போஸ்தொலிக்க தொண்டு அவரைப் பரிசுத்த திருச்சபை புனிதர் வரிசையில் ஏற்றுக்கொண்டுள்ளது. முத்திப்பேறு பெற்ற பட்டம் கொடுக்கப்பட்ட யோசவாஸ் முனிவருக்கு அர்ச்சியசிஷ்டர் பட்டம் சூட்டுவதற்காகப் பரிசுத்த பாப்பரசர் 2ம் அருள் சின்னப்பர் எதிர்வரும் 20.01.1995 இலங்கை வருகிறார். 1705ம் ஆண்டு ஆவணி 313 திகதி வந்து சேர்ந்த நான்கு குருக்களும் யோசவாஸ் முனிவர் வன்னியில் நிற்பதையறிந்து அவரிடம் வந்தனர். பெர்ராது சுவாமியும் அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்தனர். செய்தி அறிந்த மெனெசேஸ் சுவாமியும் கொழும்பிலிருந்து இங்கு வந்தார். மாதா திருநாளை மருதமடுவில் புரட்டாதி மாதம் 8ந் தேதி கொண்டாடியபின் அடுத்த நாள் சங்கம் கூடி ஆலோசனை செய்த பின் வேலையைப் எட்டா-கப்பரிந்து கொண்டனர்.

01. யோசவ்தே மெனசேஸ் சுவாமியாருக்குப் புதுக்குடியிருப்பு, அளம்பில், பூநகரி, யாழ்ப்பாணம், தீவுகள்;

02. பேதுரு பெர்ராது சுவாமியாருக்கு மருதமடு, மாதோட்டக் கிராமங்கள்;

03. ஜாக்கோமே கொன்சால்வேஸ் சுவாமியாருக்கு மன்னார், அரிப்பு, வன்னி கிராமங்கள்;

04. பேதுரு தா சல்தானா சுவாமியாருக்கு கண்டி, மாத்தளை;

05. மிக்கேல் தே மெல்கா சுவாமியாருக்கு சப்பிரகாமா, ஊவா;

06. யோசவ் தே யேசுமரியா சுவாமியாருக்கு புத்தளம் சுற்றாடல்;

07. மனுவல் தே மிறாண்டா சுவாமியாருக்கு கொழும்பு, நீர்கொழும்பு, களுத்துறை;

08. பிரான்சீஸ்கு தே யேசு சுவாமியாருக்கு கல்கமம், குருவிக்குளம், கீழா மூலை.

யோசவாஸ் அடிகளார் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்றுக்-கொண்டார்.

வன்னிப் பகுதிக்கு ஜாக்கோமே கொன்சால்வேஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் தமிழ் கற்றவர். செபங்கள், பிரார்த்தனைகள்

தமிழில் ஆக்கினார். தமிழர் பண்பாட்டில் ஊன்றி உறவாடித் தமிழர் மத்தியில் சிறந்த சேவை புரிந்தார்.

கத்தோலிக்க மக்களைத் தேடி, வீடுவீடாகத் திரிந்து அகப்படு-பவர்களைச் சங்காரம் செய்யும் ஒல்லாந்தரின் ஆட்சிக் காலம் அது. அதனால் மக்கள் பயத்தினால், கொன்சால்வேஸ் அடிகளார், கத்தோ-லிக்க மக்களைத் தேடிச் செல்லும்போது, அவரை உள்ளே வரவிடாது வெளியே விட்டுக் கதவுகளை மூடிவிடுவார்கள். எங்குபோவதென்று புரியாது அலைந்து திரிந்து உயிரைக் கொல்லும் ஆட்சியாளருக்கு அஞ்சி, பொழுது விடியுமுன் காடுகளுக்குள் புகுந்து மறைந்து திரியும் நிலையும் சுவாமிக்கு ஏற்பட்டது.

கல்லும் முள்ளும் இடற, கொடிய மிருகங்களின் மத்தியில் காடுக-ளின் வழியே உயிரையும் பொருட்படுத்தாது மன்னார், முசலி, அரிப்பு போன்ற இடங்களிலிருந்து வவுனியாவுக்கு வந்து தமது சேவையை இறைவ-னுக்காகப் புரிந்தார். யோசவ்வாஸ் முனிவரைப் போன்றே இவரும் இறைவன் பெயரால் புதுமைகள் செய்துள்ளார். ஒரு முறை, விபச்சா-ரியான ஒரு பெண்ணுக்குப் புத்தி கூறும்போது, அவள் குருவை நிந்தித்-தாளாம். அவர் மனம் நொந்து அவளைக் கலைத்து விட்டார். அன்றி-ரவு படுக்கைக்குச் சென்றவள் மீண்டும் எழுந்திருக்கவில்லையெனக் கதைக்-கப்படுகின்றது. இச்சம்பவம் அநேகரைத் தீய வாழ்க்கையிலிருந்து விடு-பட வைத்தது.

## உழியக்காரர்:

அக்காலத்தில் குருக்கள் இறைபணிக்காக வேறு இடங்களுக்குச் செல்லும்-போது அவர்களால் நியமிக்கப்படும் தொண்டர்கள் கத்தோலிக்க மக்க-ளுக்குச் செபங்களைச் சொல்லிக் கொடுக்கவும் ஞாயிறு வாரங்களில் ஒன்றுகூட்டித் தியானங்கள் செய்வதற்கும் இவர்கள் முன்னின்று பணிகள் செய்-தனர். யோசவாஸ் முனிவரே இம் முயற்சியைத் தொடக்கி வைத்தார். கொன்சால்வேஸ் சுவாமியாரும் பின்தொடர்ந்து வந்த குருக்களும் இந்-நடைமுறையைப் பின்பற்றினர்.

பின்னிட்ட காலங்களில், இக் கடமைகளுடன் விவசாயிகளான கத்தோலிக்க மக்களிடமிருந்து நெல்லைப் பெற்று அதை விற்றுப் பணமாக்கி குருக்களிடம் கொடுப்பார்கள். குருக்கள் வேறு வேறு இடங்களுக்குச் செல்லும்போது ஒருவரோ இருவரோ அவருடன் துணைக்குப்போய் வருவார்கள்.

சமயக் கடமைகளைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கவனித்துக் குருவு-க்குக் கூறுவதும், கோவிலையும், சொத்துக்களையும் பாதுகாப்பதும் இவர்களது கடமைகளாகவிருந்தன. வவுனியா புனித அந்தோனியார் ஆலய வரலாற்றில் இக் கடமைகளைச் செய்ய முனிவரினால் தெரியப்பட்டவர் அந்தோனி பூதநாதர் ஆவார். இக் கடமைகளைச் செய்பவர்களை, மெலிஞ்சியார், அண்ணாவி, மூப்பா, சங்கிறிஸ்லாம் என அழைப்பர். இவர்கள் எதுவித வேதனமும் பெற்றுக் கொள்வதில்லை. தற்பொழுது ஆலய சபை நிர்வாகிகள் இக் கடமைகளைக் கவனிக்கின்றனர்.

<u>கோவில் இடமாற்றமும்,</u>
<u>பணி செய்த குருக்களும்.</u>

வளர்ந்துவரும் கத்தோலிக்க மக்களின் தேவைக்கு முன்பிருந்த கோவில் போதாது எனக் கண்ட அருட்திரு சவரிமுத்து அடிகளார் 1880ம் ஆண்டளவில், தற்போது புனித அந்தோனியார் ஆலயம் மிளிரும் இடத்திற்கு மாற்றினார். இங்கும் ஆரம்பத்தில் இக்கோவில் ஒரு ஓலைக்கொட்டிலாக அமைக்கப்பட்டது. நாற்புறமும் 2½அடி உயரத்திற்குச் செங்கல்லால் கட்டப்பட்டு மிகுதியான இடம் கிடுகினால் அடைக்கப்பட்டது.

அருட்திரு மாகயட் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்தபோது 1888ம் ஆண்டு ஆடி மாதம் 15ம் திகதி தற்போதிருக்கும் ஆலயத்திற்கு யாழ்ப்பாணம் ஆயர் மகாவந்.ஜூல ஆண்டகை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இங்கு பணியாற்றிய குருக்களின் அளப்பரிய சேவையினால் இவ்வாலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்றது. 1924ம் ஆண்டு அருட்திரு அகஸ்ரீன் அடிகளாரால் தரைக்குச் சீமெந்து இடப்பட்டது. 1947ம் ஆண்டு அருட்திரு.சற்.என்.குரூஸ் அடிகளாரால் ஊர்து அன்னைக்கு கெபி கட்டப்பட்டது. அருட்திரு.யோன் சிங்கராயர் காலத்தில் ஒரு பக்கக் கோவில் கட்டப்பட்டது. அருட்திரு.லூயிஸ் யோசவ் காலத்தில் மறுபக்க கோவில் கட்டப்பட்டது. இப்போழுது ✝ போன்ற அமைப்பில் இவ்தேவா-லயம் அமைந்தது.

அருட்திரு.பிலிப் பொன்னையா அடிகள் காலத்தில் கோவில் முன்-பக்கம் நீட்டப்பட்டு முகப்பு அலங்காரமாகக் கட்டப்பட்டுப்புனித அந்தோனியார் திருச் சுருபமும் அமர்த்தப்பட்டது. பழைய மணிக்கூட்டுக் கோபு-ரத்தையும் திருத்தியமைத்தார். வவுனியா பங்குக்காகன பின்வரும் சிற்றாலயங்களையும் கட்டுவித்தார்.



யாழ் மறை மாவட்ட ஆயர்
கலாநிதி பேரருட்திரு.வ.தியோகுப்பிள்ளை
ஆண்டகை.



மன்னார் மறை மாவட்ட
முதல் ஆயர் கலாநிதி.
பேரருட்திரு.தோமஸ்
சவுந்தரநாயகம் ஆண்டகை.



வன்னியின் முதற்குரு அருட்திரு.
யே.பி.தேவராசா அடிகளார்.




தற்போதைய பங்குத் தந்தை
அருட்திரு.எ.பி.தேவசகாயம்
அடிகளார்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தெற்கிலுப்பைக்குளம் | - | புனித செபஸ்தியார் ஆலயம் |
| 02. | பாவற்குளம் | - | கிறிஸ்து அரசர் ஆலயம் |
| 03. | வேப்பங்குளம் | - | புனிதசூசையப்பர் ஆலயம் |
| 04. | கல்மடுக்குளம் | - | புனித அந்தோனியார் ஆல. |
| 05. | ஓமந்தை | - | அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயம். |

இவர் காலத்தில் புனித அந்தோனியார் ஆலயத்துக்குரிய காணி பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு யாழ் ஆயரால் வவுனியா கத்தோலிக்க மக்களுக்கு விற்கப்பட்டது. இக்காணித் துண்டுகளில் அநேகமானவை இந்துக்களுக்குக் கைமாறியுள்ளது.

வவுனியா பங்கில் பணிபுரிந்த குருக்கள்:

01. அருட்திரு. சந்திரசேகரம் அடிகளார்.
02. அருட்திரு. சவரிமுத்து அடிகளார்
03. அருட்திரு. அந்தோனி அடிகளார்.
04. அருட்திரு. செபஸ்ரியன் அடிகளார்.
05. அருட்திரு. பிரான்சிஸ் அடிகளார்
06. அருட்திரு. மயங்கோ அடிகளார்
07. அருட்திரு. றோபேட் அடிகளார்.
08. அருட்திரு. ஜெண்டல் அடிகளார்.
09. அருட்திரு. எஸ். யே. அகஸ்ரின் அடிகளார்.
10. அருட்திரு. டெசி அடிகளார்.
11. அருட்திரு. ஏ. சிங்கராயர் அடிகளார்.
12. அருட்திரு. எஸ். வேந்தர்கோன் அடிகளார்.
13. அருட்திரு. சற். என். குருஸ் அடிகளார்.
14. அருட்திரு. எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார்.
15. அருட்திரு. எஸ். பீ. அல்பிறட் அடிகளார்.
16. அருட்திரு. சி. எம். ஓம்லோ அடிகளார்.
17. அருட்திரு. எஸ். வேந்தர்கோன் அடிகளார் (2ம் முறை)
18. அருட்திரு. யோன் சிங்கராயர் அடிகளார்
19. அருட்திரு. எல். யோசப் அடிகளார்.
20. அருட்திரு. பிலிப் பொன்னையா அடிகளார்.
21. அருட்திரு. அரம்சி குருஸ் அடிகளார் (துணைப்பங்குக்குரு)
22. அருட்திரு. லூயிஸ் இராசையா அடிகளார் (துணைப்பங்குக்குரு)



எமது ஆலயத் திருப்பீடத்தின் தோற்றம்

23. அருட்திரு. லூ யிஸ் பொன்னையா அடிகளார்.
24. அருட்திரு. ஜொய் கிறிஸ்தோஸ்தம் அடிகளார்.
25. அருட்திரு. ஜே. நீக்கிளஸ் அடிகளார்.
26. அருட்திரு. பி. எம். இம்மானுவல் அடிகளார்.
27. அருட்திரு. அல்பன் இராசசிங்கம் அடிகளார்.
28. அருட்திரு. பி. யேசுராஜா அடிகளார்.
29. அருட்திரு. சி. எஸ். குரூஸ் அடிகளார்.
30. அருட்திரு. சொடுசர் தேவராசா அடிகளார் (துணைப்பங்குக்குரு)
31. அருட்திரு. கெனடி அடிகளார் (துணைப்பங்குக் குரு)
32. அருட்திரு. ஸ்ரீபன்ராஜா அடிகளார் (துணைப் பங்குக் குரு).

தற்போது அருட்திரு. எ. பீ. தேவசகாயம் அடிகளார் பங்குத் தந்தையாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். துணைப் பங்குத்தந்தையாகத் அருட்திரு. சகாயதாஸ் அடிகளார் 12.07.94 வந்துள்ளார்.

## புனித அந்தோனியார் பெருவிழா:

இலங்கையில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் புனித அந்தோனியாரைப் பாதுகாவலராகக் கொண்டுள்ள ஆலயங்களே அதிகமாக உள்ளன. அவ்வாலயங்களில் செவ்வாய்க் கிழமைகளில் விசேட வழிபாடும் ஆராதனைகளும் நடைபெறுகின்றன. கத்தோலிக்கர் மாத்திரமல்லாமல் ஏனைய சமயங்களைச் சார்ந்த மக்களும் பெருந் திரளாக வந்து கோடி அற்புதரான அவரை வேண்டிச் செல்வார்கள். கொழும்பு கொச்சிக்கடை, யாழ்ப்பாணம் பாஷையூர், மானிப்பாய், வவுனியா இறம்பைக்குளம் ஆலயங்களைக் குறிப்பிடலாம்.

புனித அந்தோனியார் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயங்களின் பெருவிழா சாதாரணமாக ஆனி மாதம் 4ந் தேதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும். பிற்பகல் 5.00 மணியளவில் நவநாள் வழிபாடுகள் இடம் பெறும். இவை ஒன்பது நாட்கள் இடம் பெற்று ஆனி மாதம் 13ந் தேதி காலை திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுருப சுற்றுப் பிரகாரத்துடன் முடிவடையும். சில ஆலயங்களில் பிற்பகலில் சுருப சுற்றுப்பிரகாரம் இடம் பெறும். அத்தோடு அன்றிரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்னதானமும் இடம் பெறும். இவைகள் வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் ஏற்புடையது. அயல் கிராம மக்கள் மாட்டு வண்டிகளிலும் வந்து புனிதரை ஆராதித்துச் செல்வார்கள்.

வவுனியாவுக்குத் திருக்குடும்பக் கன்னியர்:

வவுனியா பங்கு சூழவரவுள்ள பல கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பாரிய பங்காகும். பங்குத் தந்தை இறம்பைக்குளத்திலுள்ள புனித-அந்தோனியார் ஆலயத்தில் நிரந்தரமாக வசித்து, ஞாயிற்றுக் கிழமை-களிலும் திருநாட் காலங்களிலும் அயல் கிராமங்களுக்குச் சென்று வருவார்-கள். இறம்பைக்குளம் நகர்ப்புறமாக இருப்பதால், குடிசனம் அதிகம். கத்தோலிக்கர் தொகையும் இங்கு அதிகமாகவுள்ளது. இப்பகுதியில் பொது நிலையினரால் நடாத்தப்பட்ட கத்தோலிக்க ஆரம்பப்பாடசாலை இருந்தது. சிறுவர்களினதும், இளைஞர்களினதும் சமய ஒழுக்க வளர்ச்சி நோக்கி இவ்விடம் துறவறக் கன்னியர்களை அழைக்கவும் பாடசாலையை அவர்கள் பொறுப்பில் கொடுக்கவும் வேண்டுமெனப் பங்குத் தந்தையும், மக்களும் விரும்பினர்.

அப்பொழுது திருக்குடும்பக் கன்னியர் சபையின் வடபகுதித் தலைவி-யாக, இளவாலையில் இருந்த சவோமைத் தாயார் அவர்கட்குத் தமது தேவைகளையும் விருப்பங்களையும் தெரிவித்துப் பல முறை விண்ணப்பித்தனர். அதன் பயனாக 1940ம் ஆண்டு ஆவணித் திங்கள் 18ம் நாள் திருக்குடும்-பக்கன்னியர் மூவர் வவுனியா மண்ணில் கால் வைத்தனர்.

அருட்சகோதரி. நந்துவிற்றி மடத்தின் தலைவியாகவும்,
அருட்சகோதரி லீயோனி பாடசாலை அதிபராகவும்,
அருட்சகோதரி றோசாறி உதவியாளராகவும்
சேவையாற்றத் தொடங்கினார்.

திருக்குடும்பச் சபை நிறுவனரின் சிந்தையில் நிறைந்த திரீத்துவம், திருக்குடும்பம் இவற்றை நினைவூட்ட மூன்று கன்னியர்களும் தமது முதற்பணியைத் தொடங்கினர். தேவை எதுவோ, அது எங்குள்ளதோ அங்கு சேவை என்பதே இச் சபையின் குறிக்கோள். எனவே, பகல் பாடசாலை, விடுதிச்சாலை, மறைக்கல்வி, பங்குப்பணி வளர்த்தோர் திருவருட்சாதன ஆயத்தம் இப்படியாகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விரிவடைந்து கொண்டு-வந்தன. இவர்கள் சேவை மூலம் மக்களும் முன்னேற்றம் அடைந்தனர். பங்கும் பலன் அடைந்தது.

விடுதிச்சாலை:

அருட்சகோதரிகளின் சேவை விரிவடைந்தது. படிப்பும் ஒழுக்கமும்

உயர்வடைந்தது. அயற்கிராமப் பிள்ளைகளும் கன்னியரால் நடாத்தப்படும் பாடசாலையை விரும்பினர். எனவே, தேவையை உணர்ந்த சபைத்-தலைவி கன்னியர்களுக்குப் புதிய இல்லம் அமைத்து, பழைய இல்லத்தை விடுதிச்சாலை ஆக்கினர். இன மத பேதமின்றிச் சகல பிள்ளைகளும் விடுதிச் சபையில் தங்கி உயர் கல்வி கற்க வசதிகள் செய்யப்பட்டன. காலப் போக்கில் யாழ், மன்னார் ஆயர் அவர்களின் தாராள சிந்தை-யும் "செடக்" நிறுவனத்தின் உதவியும் இணைந்து தற்போதைய அழகான, மிக வசதிகள் கொண்ட, மாதக் கட்டட விடுதிச்சாலை அமைக்கப்பட்டது. பழைய விடுதிச் சாலை அனாதைச் சிறுவர் இல்லம் ஆக்கப்பட்டது.

திருக்குடும்பக் கன்னியர் சபையின், இறைபணிச் சேவையின் பல-னாகத் வவுனியாப் பங்கிலிருந்து தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்துத் துறவு பூண்ட கன்னியர்கள்;

01. அருட்சகோதரி. கொன்சலாற்றா - மரியாம்பிள்ளை
02. அருட்சகோதரி. பிளன்டீனா - மனுவேற்பிள்ளை
03. அருட்சகோதரி. கிளாறின் - தேவசகாயம்
04. அருட்சகோதரி. மிரியம் - வேந்தர்கோன்
05. அருட்சகோதரி. காமலிற்றா - அம்புறோஸ்
06. அருட்செல்வி. மரியகொறற்றி - செல்வத்துரை
07. அருட்சகோதரி. பெனடிற்றா - பத்திநாதர்
08. அருட்செல்வி. கர்மன் - இம்மானுவல்
09. அருட்செல்வி. மேரி - லாசறஸ்
10.

விடுதிச் சாலையில் தங்கிக் கல்வி கற்றுத் திருக்குடும்பக் கன்னியரின் வழிகாட்டலால் இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்தவர்கள்:

01. அருட்செல்வி. கத்தரின் குரூஸ்
02. அருட்செல்வி. எய்டன்
03. அருட்செல்வி. ஸ்ரெல்லா துரைசாமி
04. அருட்செல்வி நெவிஸ் லடிஸ்லாஸ்.
05. அருட்செல்வி. மேரிராணி அந்தோனிப்பிள்ளை
06. அருட்செல்வி. திரேசா சில்வா
07. அருட்செல்வி. கிளேயா - திருச்சிலுவைக்கன்னியர் -
08. அருட்செல்வி. எலிசபெத் - நல்லாயன் கன்னியர் -
09. அருட்செல்வி. அட்லின் - - " - -
10. அருட்செல்வி. றோசாறி - " --

புனித அந்தோனியார் ஆரம்பப் பாடசாலை:

சமயத்தின் வளர்ச்சியில், கல்வி வளர்ச்சி முக்கிய இடத்தைப்பிடிக்கிறது. 1698ம் ஆண்டளவில் யோசவாஸ் முனிவரின் ஆசியுடன் ஒரு திண்ணைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்பட்டு, சமய நூல்கள் வாசிக்கப் பழக்கப்பட்டது. அந்தோனி புதநாதரின் மருமகனான யேசு செல்வம் இத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிப்பித்ததாக அறியக் கிடக்கின்றது. 1890ம் ஆண்டளவில் புனித அந்தோனியார் ஆலயத்தின் வலது பக்கத்தில், முதற் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

1918ம் ஆண்டு அருட்திரு. ஹென்டல் அடிகளார் வவுனியா பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். இவரது 15 வருட பணியில், கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டது. முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே கல்வி போதிக்கப்பட்டு வந்தது. மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கு வவுனியாவில் பாடசாலைகள் இல்லாமையினால் யாழ்ப்பாணம் சென்று படிக்க வேண்டியிருந்தது. 1940ம் ஆண்டு திருக்குடும்ப சபைக்கன்னியர் இப்பாடசாலையைப் பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை அவர்கள் தலைமையிலேயே இப்பாடசாலை இயங்கி வருகின்றது. இப்பாடசாலையின் அதிபர்களாக,

| | | |
|---|---|---|
| 1940 - 1945 | - | அருட்சகோதரி. வியோனி |
| 1946 - | - | அருட்சகோதரி. மொனிக்கா |
| 1947 - | - | அருட்சகோதரி. அஞ்சலா |
| 1948 - 1950 | - | அருட்சகோதரி. இமெல்டா |
| 1951 - 1963 | - | அருட்சகோதரி. அம்புறோஸ் |
| 1954 - 1957 | - | அருட்சகோதரி. எமிலி |
| 1958 - 1960 | - | அருட்சகோதரி. வியோனி |
| 1961 - 1974 | - | அருட்செல்வி. டொலறோஸ் |
| 1975 - 1977 | - | அருட்செல்வி. வலன்ரையின் |
| 1978 - 1989 | - | அருட்செல்வி. சிறில் அக்குவைனஸ் |
| 1990 தொடக்கம் | - | அருட்செல்வி. ரூட் மடுத்தீன் |

ஆரம்பத்தில் மண்ணால் மெழுகப்பட்ட ஓலைப் பள்ளிக்கூடம், பின் ஒரு பிரதான மண்டபத்தை மட்டும் கொண்ட ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வந்தது. அருட்சகோதரி. எமிலி காலத்தில் சிரேஷ்ட பாடசாலைத் தரத்தை எய்தியது. அருட்சகோதரி டொலறோஸ் காலத்தில் "டொல்றோஸ்" மண்டபம் கட்டப்பட்டது.

1971ம் ஆண்டு க.பொ.த.உயர்தரம்—கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மகாவித்தியாலய நிலைக்கு உயர்த்தப்பட்டு இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் என்ற பெயரும் கொடுக்கப்பட்டது. அருட்சசோதரி வலன்ரையின் காலத்தில் இரு கட்டடங்கள் பெறப்பட்டது. 1978ம் ஆண்டு இப்பாடசாலைக்கு வருகை தந்த கௌரவ கல்வி அமைச்சர், விஞ்ஞான கூடம் அமைத்துத் தருவதாக உறுதி கூறியதோடு "பான்ட்" வாத்தியக்கருவிகளுக்கும் அடிகோலிச் சென்றார்.

அருட்சகோதரி சிறில் அக்குவைனஸ் காலத்தில் இப்பாடசாலை அபரிமிதமான வளர்ச்சியைப் பெற்றது. மாடிக் கட்டடங்கள் மூன்று, விஞ்ஞான ஆய்வு கூடம், மனையியல் ஆய்வு கூடம் அமைக்கப்பட்டு வவுனியா நகரக் கொத்தணி மூலாதாரப் பாடசாலையாக ஆக்கப்பட்டது. அருட் சகோதரிகளால் நடாத்தப்படும் பெண்கள் விடுதிச்சாலை இருப்பதால் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள மாணவிகள் இங்குதங்கிக் கல்வி கற்கக்கூடிய—தாய் அமைகின்றது. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் உயர்கல்வி கற்றுப் பலகலைக்கழகம் சென்று வெளியேறியோர் ஏராளம். தற்பொழுது 2500பிள்ளைகள் சாதி, சமய வேறுபாடின்றிக் கல்வி கற்—கிறார்கள். 95 ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். இவர்களில் 90 வீத—மானோர் வெளிமாவட்ட ஆசிரியர்களாவார்.

இதுகாலவரை 5ம் ஆண்டுவரை ஆண்களும் அனுமதிக்கப்பட்டு வந்த—னர். 1994 தை மாதத்திலிருந்து ஆண்களுக்கான அனுமதி மறுக்கப்பட்—டுள்ளது. 1960ம் ஆண்டுகளில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பாட—சாலைகளில் இதுவும் ஒன்றாகும். அப்போது கத்தோலிக்க மதத்தில் அடிப்படையில் பெறப்பட்ட இப்பாடசாலையில் தற்போது 496 கத்தோ—லிக்க மதப்பிள்ளைகள் மாத்திரம் கல்வி கற்கிறார்கள். எனவே, அடுத்து வரும் அதிபர்கள் அருட்சகோதரிகளாக இருக்கும் வாய்ப்புக்கிடைக்காம—லும் போகலாம். இப்பாடசாலையை "தேசிய பாடசாலை"யாக ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அறியக்கிடக்—கின்றது.

சென்ற் அன்ரனீஸ் அக்கடமி:

வவுனியாவில் மாணவர்கள் மேலதிக கல்வி பெற ஒரு கல்விக்கூடம் (ரியூட்—டரி) அவசியமெனப் புனித அந்தோனியார் ஆலய நிர்வாக சபையினரின் வேண்டுகோளைப் பங்குத் தந்தை அருட்திரு.யேசுராஜா அடிகளார் ஏற்று, மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி பேரருட்திரு தோமஸ் சவுந்தர—

-நாயகம் ஆண்டகையின் அனுமதியுடன் புனித அந்தோனியார் அக்கடமியை 1987ம் ஆண்டு தை மாதம் ஆரம்பித்தார். இக் கக்லவிக்கூடம் இன்னும் மிகத் திறமையாக இயங்கி வருகின்றது. 7ம் ஆண்டு தொடக்கம் க.பொ.த.உயர்தர வகுப்புவரை 600 மாணவ மாணவியர் நன்மையடை-கின்றனர். இக் கல்விக்கூடம் பிரதானமான பாடங்களைப் போதிப்பது மட்டுமன்றி நற்பழக்க வழிகளிலும் கவனமெடுத்து சேவை செய்வதால் வவுனியா மாவட்டத்திற்கே பெரும்பணி புரிகின்றதெனலாம். இக்கல்வி நிலையம் புனித அந்தோனியார் ஆலய வழவுக்குள்ளேயே இயங்கி வருகி-ன்றது. இதன் இயக்குநராகப் பங்குத் தந்தை அவர்களே செயற்பட்டு-வருகின்றார்.

## புனித அந்தோனியார் பாலர் பாடசாலை:

புனித அந்தோனியார் நாமம் கொண்ட பாலர் பாடசாலை கடந்த 17 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. வவுனியா நகரப் பகுதி மாணவ மாணவிகள் ஆயிரத்தி ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இங்குதான் தங்கள் பாடசாலைக் கல்வியை ஆரம்பித்தவர்கள் என்று கூறினால் மிகையாகாது. பிள்ளைகளின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரிப்பதனால் பாடசாலைக் கட்டடத்தைப் பெருப்பிக்கவும் மேலதிக தளபாடங்களைப் பெறுவதற்கும் பெற்றோரே பண உதவி பொருளுதவி புரிகின்றனர். நவீன முறையில் கல்வி ஊட்டுவதற்கு உதவியாகத் தொலைக்காட்சிப் பெட்டியும் "டெக்" கருவியும் அன்பளிப்புச் செய்துள்ளார்கள். பாடசாலைக்கென்றே "பான்ட்" வாத்தியக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

காலை 8.46க்கு ஆரம்பமாகி மதியம் 12.00 மணிக்கு இப்-பாடசாலை முடிவடையும். வருட ஆரம்பத்தில் பெற்றோர் ஒன்று கூடல் இடம்பெறும். 2ந் தவணை நடுப்பகுதியில் விளையாட்டுப்போட்டியும் வருட இறுதியில் ஒளிவிழா நிகழ்ச்சியும் இடம் பெறும். இவ்விழாக்களில் பாலர்களின் "பான்ட்" வாத்திய இசையும் இடம் பெறும். தற்பொழுது அருட்சகோதரி ஒருவரின் முழுநேர மேற்பார்வையின் கீழ் 06 ஆசிரியை-கள் கடமையாற்றுகின்றார்கள். இரு பாலரும் உட்பட 175 பிள்ளைகள் இருக்கின்றார்கள். பங்குத் தந்தை அவர்களே இப்பாலர் பாடசாலையின் இயக்குநர் ஆவார். பிள்ளைகளைப் பெற்றோரோ வேறு ஒருவரோ காலையில் கூட்டிக்கொண்டு வருவார்கள். மீண்டும் பாடசாலை முடிய வந்து கூட்டிச் செல்வார்கள்.

புனித மரியாள் சிறுவர் இல்லம்:

பெற்றோரை இழந்த (அநாதைப்) பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு உருவாக்கப்பட்ட விடுதிதான் புனித மரியாள் சிறுவர் இல்லம். இது ஆலய வளவினுள் அமைந்திருக்கும் திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் ஒரு பகுதியில் இடம் பெற்றுள்ளது. 1988ம் ஆண்டு மாசி மாதம் மூன்றாந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லத்தில் 24 பெண் பிள்ளைகள் தங்கியிருந்து இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலுகின்றனர். இவர்களை அருட்சகோதரிகளே பராமரித்து வருகின்றனர். வவுனியாப் பங்கையும் அயல் பங்குகளையும் சேர்ந்த சிறார்களே இங்கு சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதே இவ் இல்லத்தின் நோக்கமாகும்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள், மறை மாவட்ட அமைப்பாகிய "வாழ்வுதயம்" மூலம் இவ்வில்லத்தை நடாத்தி வருகின்றார். வவுனியா நகரத்தில் அநாதைச் சிறுவர்களுக்கான காணி ஒதுக்கப்பட்டுக் கட்டட வேலைகள் ஆரம்பிப்பதற்காகச் சகல முயற்சிகளும் மன்னார் ஆயர் அவர்கள் பங்குத் தந்தை மூலம் எடுத்துள்ளார். வெகு விரையில் இக்கட்டடம் "புனித மரியாள்" இல்லம் என்ற பெயருடன் இயங்கும்.

வவுனியா பங்கில் பக்திச் சபைகளும் மன்றங்களும்:-

இலங்கை முழுவதும் உள்ள கத்தோலிக்க ஆலயங்களிலுள்ள பக்திச்சபைகள் போன்று வவுனியா பங்கிலும் பக்திச் சபைகள் ஏற்படுத்தப்பட்டு மக்களின் ஞான வளர்ச்சிக்கும் ஆலய வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கப்படுகின்றது. மனிதன் தனித்துவமாக வாழாது குழுவாக வாழ அழைக்கப்பட்டுள்ளான். குழுவாக வாழும் மனித சமுதாயம் படைப்பின் இறைவன் குழுவாக வழிபடுவதால் அதிகம் பலன் பெறுகின்றது. இறை மக்களைக் குழுவாக இறைவனோடு உரையாடச் செய்வதுதான் பக்திச் சபைகளின் பணி.

மரியாயின் சேனை:

இச் சபை 1947ம் ஆண்டு ஆடி மாதம் 18ந் திகதி பங்குத் தந்தை அருட்திரு. சற். என். குருஸ் அடிகளாரால் 10 அங்கத்தவர் கொண்ட சபையாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இற்றைக்கு 47 வருடங்களாக தம் சேவையை திறம்பட ஆற்றி வருகின்றது. அசைவளிற் சில:

01. சாதி சமய பேதமின்றி இல்லங்களைத் தரிசித்து அங்குள்ளவர்களோடு உரையாடி, கருத்துக்களைப் பகிர்ந்து அவர்களின் ஆன்ம தேவைகளில் உதவி புரிகின்றனர்.

02. முறையற்ற வாழ்கை நடாத்தும் குடும்பங்களைத் திருச்சபையின் முறைப்படி, பங்குத் தந்தையின் துணையுடன் சிறந்த கத்தோலிக்க குடும்பங்களாக உருவாக்குகின்றனர்.

03. நோயாளர்களைச் சந்தித்து ஆறுதல் கூடிற அவர்களின் நலத்திற்காகச் செபிக்கின்றனர்.

04. மரணச் சடங்குகளின் பங்கு எடுத்து வழிபாடுகளை நடாத்துகின்றனர்.

புனித வின்சென்ற் டி போல் சபை:

1976ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ந் திகதி பங்குத் தந்தை அருட்திரு.வி.எம்.இம்மானுவல் அடிகளாரால் 10 அங்கத்தவர்களுடன் இச் சபை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1982ம் ஆண்டு பங்குத் தந்தை அருட்திரு.அல்பன் இராசசிங்கம் அடிகளார், புனித வின்சென்ற் டி போல் சபை பாடசாலைப் பந்தியை ஆரம்பித்து வைத்தார். இச் சபையினர், ஏழைகள், அநாதைகள், ஆதரவற்றவர்கள், கைவிடப்பட்டோர் போன்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்தலும் அவர்களின் முன்னேற்றத்திற்கு உமதவுதலுமே முக்கிய பணியாய் உள்ளது.

இதற்குச் செலவிடத் தேவையான நிதியை கொடி விற்பனை, இல்லங்களில் தரும உண்டியல் வைத்துப் பெறல், பிடி அரிசி சேர்த்தல், கலை நிகழ்ச்சிகள் வைத்துப் பெறல், அதிர்ஷ்ட லாபச் சீட்டுகள் மூலம் பெறல். அத்தோடு தலைமை ஸ்தாபனத்திலிருந்தும் திரட்டுகின்றனர்.

தற்பொழுது பெரும் முயற்சியொன்றை அணுகியுள்ளனர். கோவிலுக்கு அருகாமையிலுள்ள 2 பேச் நிலத்தில் ஒரு கத்தோலிக்க வாசிகசாலை அமைக்கும் பணி. இப்பணி கை கூடின் கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமல்ல சகல இன மக்களுக்கும் பெரும் நன்மை ஏற்படும் என்பது திண்ணம்.

வழிபாட்டுச் சபை:

ஆலய வழிபாடுகளைச் சிறப்பிப்பதற்கும் அதன் உட்பொருளை விளங்கி மக்கள் வழிபாட்டில் பயனுள்ள முறையில் பங்கு பெறச் செய்வதற்கும்-

திருவழிபாட்டுக்குழுவின் அவசியத்தை உணர்ந்த பங்குத் தந்தை அருள் திரு. யேசுராஜா அடிகளார் 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16ந் திகதி இக்குழுவினை ஆரம்பித்துவைத்தார். இவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்திரு .பிலிப் அடிகளார் வழிபாடுகளைப் பற்றிய பல விளக்கங்களையும் கருத்துக்களையும் அளித்து வந்துள்ளார். பார்வையாளர்ாக இருந்த பொது நிலையினர் பங்காளியாகி கருத்துடன் திரு வழிபாடுகளில் பங்கெடுக்கச் செய்து வருகின்ற பெருமை இக்குழு அங்கத்தினரைச் சாரும்.

## புனித செசிலியா மன்றம்:

வழிபாடுகளைச் சிறப்பிப்பதில் பாடல்கள்தான் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அக்காலந்தொட்டு வழிபாடுகளில் பாடல்கள் இடம் பெற்று வந்திதென்னும் அப்பொழுது இம்மன்றம் "பாடகர் குழாம் எனவும் பின் செசிலியா மன்றம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இப் பங்கைச் சேர்ந்த பிள்ளைகள் சிறந்த பங்கினை ஆற்ற வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் ஆர்வதத்துடன் முன்னின்று உழைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும், இக் கழகத்தை அருட்திரு. யேசுராஜா அடிகளார் 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ம் திகதி அங்குரார்ப் பணம் செய்து வைத்தார். தமது சிறந்த ஒத்துழைப்பினால் இவர்கள் பாடல்கள் மூலம் திருவழிபாடுகளைச் சிறப்பித்து வருகின்றனர். இவர்களோடு சில ஆண்கள் ஒன்று இணைந்து பாடல்கள் சிறப்புற உதவி வருகின்றனர்.

இவர்களின் பலுருக்கு "ஒகன்" மீட்பதற்கு அருட்திரு. பி. எம். இமானுவல் அடிகளார் இடையிடையே வங்காலையிலுள்ள ஆசிரியர்களை அழைப்பித்து பயிற்சிகளைக் கொடுத்து உதவினார்.

இக் கழகத்தினர் ஆலயத் துப்பரவு வேலைகளிலும், ஆலய அலங்காரிப்பு வேலையிலும் முழுமையாகப் பங்கெடுக்கின்றனர். இவர்கள் அனைவரும் இளம் யுவதிகளாவார்.

## புனித ஞானப்பிரகாசியார் மன்றம்:

முன்னைய காலங்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட வயதெல்லையினருக்கெனத் தொடர்ந்து இயங்கி வருகின்ற கழகம் இதுவாகும். இக்கழகத்தில் ஆண்கள் மாத்திரம் இடம் பெறுவர். இவர்கள் பீடப் பணியாளர்களாக

கோவில் வழிபாடுகளில் குருக்களுக்கு உதவி புரிவார்கள். இவர்களுக்கென வழிபாடுகளில் அணிவதெற்கென கோவிற் சீருடைகள் உண்டு.

இவர்கள் தரமான கலை நிகழ்ச்சிகளையும் தேவையான போது தந்து உதவுவார்கள்.

இப் பக்திச் சபைகள் அனைத்தும் பங்குத் தந்தையின் மேற்பார்வையில் அருட் சகோதரிகளின் வழிநடத்துதலிலும் செம்மையுறச் செய்யப்பட்டு வருகின்றன. இச்சபைகள் அனைத்தும் ஒவ்வொரு வருடமும் தங்கள் சபைகளின் பெயர் கொண்ட புனிதர்களின் தினங்களைத் திருப்பலி வைத்து விருந்துபசாரங்களுடன் கலை நிகழ்ச்சிகளும் சேர்ந்து சிறப்புறக் கொண்டாடி வருகின்றன.

<u>புனித அந்தோனியார் ஆலய சபையும் பங்குச் சபையும்:</u>

புனித அந்தோனியார் ஆலய சபை அருட்திரு பி.எம். இமானுவல் அடிகளாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முற்காலத்தில் மூப்பர், மெலிஞ்சியார் சங்கிறித்தாம் ஆகியோர் பார்த்த கடமைகளை இச்சபை மூலம் கூட்டாகச் செயற்பட உதவியாயிற்று. பின் அந்தோனியார் ஆலயத்திற்குச்சேர்ந்த கத்தோலிக்க மக்களே இதில் அங்கம் வகித்தனர். ஆலயப் பெருவிழா ஒழுங்குகள் தாபனிப்புச் சேர்த்தல், ஈஸ்டர், நத்தார் விழாக்களுக்கு பணம் சேர்த்தல் ஆலயத் திருத்த வேலைகளுக்கு மக்களிடம் உதவி பெறல் பொது விடயங்களில் பங்குத் தந்தைக்கு உதவிபுரிதல், சில சமயங்களில் ஆலோசனை வழங்கல் இச்சபையின் கடமைகளாக அமைந்திருந்தன; காலப்போக்கில் இச் சபை விரிவாக்கப்பட்டது. ஏனைய சிற்றாலயங்களைச் சேர்ந்த அங்கத்தினரும் புனித அந்தோனியார் ஆலய நிர்வாக சபைக்குச் சேர்க்கப்பட்ட மொத்தம் 26 அங்கத்தினர்களைக் கொண்டதாக இச்சபை அமைந்திருந்தது.

அருட்திரு ஏ.பி.தேவசகாயம் அடிகளார் 1993ம் ஆண்டு இப்பொதுச் சபையை மேலும் மெருகூட்ட விரும்பினார். தற்பொழுதுள்ள கால கட்டமும் சூழ்நிலையும் பின்வரும் ஆலயங்களில் மாத்திரம் இறைவழிபாடுகள் செய்யக்கூடியதாக இருக்கின்றது.

01. இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயம்
02. வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயம்
03. குருமங்காடு கிறிஸ்து அரசர் ஆலயம்

04. தெற்கிலுப்பைக்குளம் புனித செபஸ்தியார் ஆலயம்,
05. தோணிக்கல் வேளாங்கன்னி மாதா ஆலயம்,
06. சூசைப்பிள்ளையார்குளம் சதா சகாயமாதா ஆலயம்,
07. பனிக்கங்குளம் வேளாங்கன்னி மாதா ஆலயம்,
08. பெரியகோமரசங்குளம் பரலோக மாதா ஆலயம்.

புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த ஏறத்தாள 350 கத்தோலிக்க குடும்பங்களுக்கும் ஏனைய சிற்றாலயங்களைச் சேர்ந்த 150 கத்தோலிக்க குடும்பங்களும் உள்ளன. மேற்காட்டிய ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் அவ்வவ் ஆலயங்களிற்குரிய தனியான ஆலய சபையை உருவாக்கினார். அத்தோடு அவ்வாலயங்களுக்குரிய மரியாயின் சேனை, வழிபாட்டுச் சபை, பாடகர் குழு போன்றவற்றையும் அமைக்கச்செய்தார். இச்சபைகள் மூலம் தத்தம் ஆலயங்களுக்குத் தேவையானவைகளைத் தாமே முன்னின்று செய்யவும் தமது ஆலய வழிபாடுகளைத் தாமே முழுமையாக செயற்படவும் அவ்வாலயமும் மக்களும் வளர்ச்சி முன்னேற்றம் பெறவும் தலைமைத்துவம், ஒற்றுமை ஓங்கவும் வழிபிறந்தது. அத்தோடு பக்திச் சபைகள் தனிமே தனித்துவச் சிறப்போடு நடைபெற வாய்ப்புக்கிடைத்தது. ஞாயிறு பிற்பகல் அவ்வாலயத்தைச் சேர்ந்த 7ம் ஆண்டுககுட்பட்ட மாணவர்களுக்கு மறைக்கல்வியும் கற்பிக்க வழிசெய்தார்.

## பங்குச் சபை:

சிற்றாலயங்களின் ஆலய நிர்வாக சபையில் அவ்வவ் வாலயங்களைச் சேர்ந்த கத்தோலிக்க குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற பிரதிநிதித்துவப்படக்கூடிய அங்கத்தவர்களை அவ்வவ்வாலய நிர்வாக சபைகளே தெரிந்து வவுனியா பங்குச் சபை உருவாக்கப்பெற்றது. எல்லா ஆலய நிர்வாக சபைப் பிரதிநிதிகளைக் கொண்ட பங்குச் சபையில், அவ்வவ்வாலயங்களில் உள்ள பக்திச் சபைகளில் ஒவ்வொரு பிரதிநிதியும் இப்பங்குச் சபைக்குச்சேர்த்துக் கொள்ளப்பட்டு மொத்தம் 21 அங்கத்தினர் செயற்படுகின்றார்கள்.

அனைத்து ஆலயங்களையும் கிராமங்களையும் சேர்ந்த 8ஆம் ஆண்டுககு மேற்பட்ட மாணவ மாணவிகள் தமது மறைக்கல்வி வகுப்புக்கு ஒவ்வொரு ஞாயிறு வாரம் 2வது திருப்பலி முடிய பங்குபற்றுகின்றார்கள். இவ்வொழுங்குகளைப் பங்குத் தந்தை அருட்திரு.தேவசகாயம் அடிகளார் மேற்கொண்டு அருட்சகோதரிகள் கத்தோலிக்க ஆசிரியர்கள் மறைக்கல்வி ஆசிரியர்கள் மூலம் நடைபெறுகின்றது.

## வவுனியா பங்குக்குருமனையும் ஏனைய கட்டடங்களும்:

வவுனியா பங்கில் பணிபுரியும் குருக்கள் தங்குவதற்கு நாம் அறியாக்காலத்திலிருந்து குருமனை இருக்கின்றது. இது காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டுக் கட்டப்பட்டு நீட்டப்பட்டுத் தற்பொழுது எல்லா வசதிகளையும் கொண்ட குருமனையாக உள்ளது. அருட்திரு.பி.எம்.இமானுவல் அடிகளாரால் பாரிய திருத்த வேலை செய்த பின் அப்படியான பெரிய திருத்தங்கள் இடம்பெற்றதாகவில்லை. 1993ம் ஆண்டு விழுந்துபோகும் நிலையிலிருந்த குசினி அழிக்கப்பட்டுப் புதிய குசினி அருட்திரு தேவசகாயம் அடிகளார் அவர்களால் கட்டப்பட்டது. இதில் வேலை செய்வோர் தங்கக்கூடிய பல அறைகள், சாப்பாட்டறை, களஞ்சிய அறை முதலியவை அடங்குகின்றது. கோவில் வளவிலுள்ள கிணற்றிலிருந்து குழாய் மூலம் குருமனை, குருமனைக்குசினி கோவில் வளவு, பாலர் பாடசாலை ஆகியவற்றிற்கு நீர் வசதி செய்யப்பட்டுள்ளது. அத்தோடு கோவிலுக்கு அருகாமையில் "றெட்பானா" நிறுவனத்தாரால் குழாய்கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

## புனித அந்தோனியார் ஆலயத் திறந்த வெளியரங்கு:

புனித அந்தோனியார் ஆலய மக்களால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுவதற்காக ஒரு திறந்த வெளியரங்கு அருட்திரு.பிலிப் பொன்னையா அடிகளாரால் அமைக்கப்பட்டது. இவ்வரங்கு முழுவதும் "சிலிப்பர்கட்டை" களால் ஆனது. அருட்திரு.பி.எம்.இம்மானுவல் அடிகளார் காலத்தில் இம் மேடைக்கு எதிர்ப்புறமாக நிரந்தரமான பெரிய திறந்தவெளியரங்கு ஒன்றை வவுனியா சுத்தானந்தபவான் உரிமையாளர் திரு.மரியநாயகம் கட்டி ஆலயத்திற்கு உபகரித்தார். மேடைக்கு அருகேயுள்ள கோவில், பாடசாலை எல்லா எல்லாச் சுற்று மதில்களையும் அடிகளாரே கட்டுவித்தார். இத்திறந்த வெளியரங்கில் பாிசுத்தவாரத்திற்குரிய திருச்சடங்குகள், தேவநற்கருணைபெருவிழா, மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

## மேய்ப்புப் பணியகம்:

புனித அந்தோனியார் ஆலய வளவுக்குள் லூர்துகெபிக்குப் பின்புறமாக மேய்ப்புப்பணியகம் அமைந்துள்ளது. இம்மண்டபம் மன்னார் மறைமாவட்டப் பொதுப்பணிக்காகக் கட்டப்பட்ட மேல்மாடிக்கட்டடம் ஆகும். இம்மண்டபம் அருட்திரு.யேசுராஜா அடிகளார் காலத்தில் 1988ம் ஆண்டு அத்திவாரமிடப்பட்டு, அருட்திரு.சி.எஸ்.குரூஸ் அடிகளால் தொடரப்பட்டு, 1990 ஆனி மாதம் 13ம் திகதி இங்கு ஏற்பட்ட வன்செயல் காரணமாக இரண்டு ஆண்டுகள் நிறுத்தப்பட்டு, மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 1994ம் ஆண்டு தை மாதத்-

-தில் முன்பக்க முழு நீளச் சுற்றுமதிலும் கட்டப்பட்டு அருட்திரு தேவசகா-ளம் அடிகளாரால் மண்டப முழு வேலையும் முடிக்கப்பட்டது.

இங்கு அநேக குருக்கள் ஒரே நேரத்தில் தங்கியிருந்து தியானம், ஆலோசனைச் சங்கங்கள், கூட்டங்கள், திருமறைப்பணியாக்கம் முதலியவற்-றில் ஈடுபட போதுமான பல அறைகளும் மேல்மாடியில் அமைந்துள்ளன. கீழ்ப்பகுதி ஒரு படமாளிகை போன்ற அமைப்பில் உள்ளது. அழகான பெரிய உயர்ந்த மேடையும் அதன் பின்புறத்தே பெரிய இரு அறைகளையும் கொண்டுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்மறைமாவட்டத்துக்குச் செல்லும்பொழுது அந்நாருக்கு நன்றி நவிலும் வைபவமும் அவரிடத்திற்கு ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்ட கலாநிதி பேரருட்திரு. இராயப்பு யோசவ் ஆண்டகைக்கு வரவேற்பு விழாவும் இம்மண்டபத்தில் நடைபெற்ற மிகப் பெரிய முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

அமையவிருக்கும் கட்டடங்கள்:

01. புனித மரியாள் சிறுவர் இல்லம்
02. அன்புக்கன்னியர் மடம்
03. கத்தோலிக்க வாசிகசாலை.

01. புனித மரியாள் சிறுவர் இல்லம் தற்பொழுது திருக்குடும்பக்கன்னியர் மடத்தில் ஒரு பகுதியில் அவர்கள் மேற்பார்வையில் இயங்கிவருகின்றது. இச்சிறுவர்களுக்கான கட்டடத்திற்குரிய ஏற்பாடுகள் தொடங்கப்பட்டுவிட்டது.

02. அன்புக்கன்னியர் துறவறச்சபை அருட்சகோதரிகள் வன்னிப்பிரதேசத்தில் செட்டிக்குளம் பங்குத்தலத்தில் தங்களது சேவையை 1975ஆம் ஆண்டு தை 25ம் திகதி ஆரம்பித்தனர். 1990ம் ஆண்டு ஆனியில் தொடங்கிய வன்செயல் காரணமாக அதற்குப் பின் அங்கு நிலை கொள்ள முடியாது வவுனியாப் பங்கிற்கு வந்தனர். இவர்கள் தங்கள் சேவையை இறம்பைக்-குளத்தில் ஓர் இல்லத்தில் தங்கி சின்னப்புதுக்குளம், வெளிக்குளம், தெற்சி-ப்பைக்குளம், கோவிற்குளம், கோமரசங்குளம் ஆகியவற்றில் இறைபணி யாற்றுகின்றனர். அவர்களுக்கு கோமரசங்குளம் பரலோக அன்னை ஆலயத்திற்கருகில் மடம் அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

03. கத்தோலிக்க வாசிகசாலை மாடிக்கட்டடம் ஒன்றை புனித அந்தோனியார் ஆலயத்திற்கருகாமையில் அமைக்கும் பொறுப்பை புனித வின்சென்ற் டி போல் சபை பொறுப்பேற்றுள்ளது. இது கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமல்லாது வவுனியா முழுவதிலுமுள்ள சகலருக்கும் இன மத பேதமின்றி பலனடைய வழியாகும்.

இம் மூன்று கட்டடங்களுக்கும் மன்னார் ஆயரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆயர் அவர்களின் பொருளாதார நிதியும் கிடைக்கவுள்ளது. பங்குத்தந்தை அருட்திரு.தேவசகாயம் அடிகளார் மூலம் இவ்வொழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குரவரின் 25வது குருத்துவ ஆண்டு நிறைவு-விழாவை 26.09.1993ல் பங்கு மக்கள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள்.

மறைமாவட்டம்:

அன்றிலிருந்து யாழ் மறைமாவட்டம் ஆரம்பமாகிய அடுத்த ஆண்டே உருவாகிய புனித அந்தோனியார் ஆலயம் 1981ஆம் ஆண்டுவரை அதன் அரைவணைப்பிலேயே தளிர் நடைபோட்டு வந்தது. மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்கள் இரண்டும் ஒன்றாக்கப்பட்டு மன்னார் மறை மாவட்டம் 1981ல் மலர்ந்தது. இப்புதிய மறை மாவட்டத்தின் முதல் ஆயராக கலாநிதி பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை நியமிக்கப்பட்டார். யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.தியோகுப்பிள்ளை ஆண்டகை இளைப்பாறிபோது தோமஸ் ஆண்டகை யாழ் மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்றார். அதனால் மன்னார் ஆயராக கலாநிதி பேரருட்திரு.இராயப்பு யோசப் ஆண்டகை திருநிலைப்படுத்தப்பட்டுப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்.

எதிர்வரும் ஒரு காலத்தில் வவுனியாவும் ஒரு மறை மாவட்டமாகி ஆயர் ஒருவர் நியமிக்கப்பட்டு புனித அந்தோனியார் ஆலயம் பேராலயம் ஆகக்கூடிய ஒரு நிலை உருவாகலாம்.

புனிதரின் பெருவிழா முடிவுற்ற பின் (13.06.1990) அன்று வன்னி நகரில் ஆரம்பமான வன்செயல்களினால் அலைப்புண்ட வன்னிமக்கள் ஆயிரக் கணக்கானோர் அவரின் ஆலயத்தில் தஞ்சம் அடைந்தார்கள். அண்டினவர்கள் அனைவரையும் அன்பாக அரவணைத்து எதுவித இடையூறுமின்றி பல நாட்கள் பாதுகாக்க கோடியற்புதரை மக்கள் இன்றும் மனநிறைவோடு வாழ்த்திப் போற்றுகின்றனர். புனித அந்தோனியார் தன்னை அண்டியவர்களுக்கு அபயமளிக்கும் பொறுப்பை, அப்போது பங்குத் தந்தையாராயிருந்த அருட்திரு.




மன்னார் மறை மாவட்டம்

சி.எஸ்.குரூஸ் அடிகளார் மூலம் செயற்படுத்ினார். பயங்கரமான சூழ் நிலையில் எங்கெங்குபோக வேண்டும் என்னென்ன செய்யவேண்டும் என்பதைத் துணிந்து செய்த அடிகளாரின் தொண்டு மறக்கப்படக்கூடியதொன்றல்ல. இவருக்கு உதவியாக அருட்திரு.கொடுதோர் தேவராசா அடிகளார் செயற் பட்டார்.

நூற்றாண்டு விழா கண்ட ஆலயம்:

இவ்வருள் நிறைந்த ஆலயம் முன்னூறு ஆண்டுகள் வரலாறு கொண்டது. 1694ம் ஆண்டு யோசவாஸ் முனிவரினால் ஆசிர்வதிக்கப்பட்ட சிலுவை நாட்டி கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் 1888ல் தற்போதிருக்கும் ஆலயத்திற்கு அத்திவாரமிடப்பட்டது. அதன் ஞாபகமாக 1988 ஆடிமாதம் 15ம் திகதி புனித அந்தோனியார் ஆலயத்தின் நூற்றாண்டு விழா சகல இன மத மக்களும் ஒன்றாகக் கூடி ஒத்துழைப்புடன் மிகக் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

இவ்வாலயத்தினதும், பங்கினதும் வன்னிப்பிரதேசத்தினதும் வளர்ச்சிக்கு வன்னி மண்ணின் முதற்குருவான அருட்திரு.யே.பி.தேவராசா அடிகளாரின் பங்கு முக்கியமானது. அவர் எந்தப் பங்குத் தலத்தில் பணிபுரிந்து நின்றாலும் தேவையானபோதெல்லாம் வருகை தந்து மக்களின் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தி முன்னோர் காட்டிய வழிகளைப் பின்பற்றவும், ஒற்றுமையாக வாழவும் வழியமைக்கின்றார். அருட்திரு.பி.எம்.இரட்ணபாலா அடிகளார் வன்னி மண்ணின் 2வது குருவாவார். இவர் தற்பொழுது வெளிநாட்டில் ஆன்மீகப்பணியாற்றுகின்றார்.

கொடிய வன விலங்குகளாக் கொண்டிருந்த, மலேரியாக் காய்ச்சல் நிறைந்திருந்த, வேதகலாபனை அனுபவித்த பல கத்தோலிக்க மக்களை வேதசாட்சிகளாகக் கொண்ட வன்னிப்பிரதேசம் 1981 வரை யாழ் மெற்றிராசனத்தாலும் அதன் பின் புதிதாக மலர்ந்த மன்னார் மேற்றிராசனத்தாலும் படிப்படியாக பல வடயங்களிலும் வளர்ச்சி கண்டுள்ளது.

வன்னி நகர் புனித அந்தோனியார் ஆலய வளர்ச்சிக்கு எண்ணரிய காரணங்களில், பின்வருவன சிலவாகும்.

* இறைவனின் திருச்சித்தம்,
* பாதுகாவலரான புனித அந்தோனியாரின் அருள்,

* யோசவாஸ் முனிவரின் வன்னி வருகையையும் அவர் ஆசீரும்
* இறைபணியாற்றிய ஆயர், குருக்களின் ஆன்மீகவாஞ்சை கொண்ட புனிதமான சேவை.
* அருட் சகோதரிகளின் பண்பும் பரிவும் கொண்ட பணி,
* கத்தோலிக்க மக்களின் விசுவாமுள்ள செபமும் தியாகம் நிறைந்த ஒத்துழைப்பும்.
* வன்னிவாழ் அனைத்து மக்களின் நிறைவான உதவியும் முழுமையான ஒற்றுமையும்.
* அரசாங்க அதிபர்கள், திணைக்கழத் தலைவர்கள் இவர்கள் போன்றோரின் சீரான கடமையுணர்வு.
* இளமான வன்னிப் பிரதேசத்தின் பொருளாதாரம்.
* வன்னியின் முதற் குரவரின் முன்மாதிரியான வழிகாட்டல்.

படிப்படியாக வளர்ச்சியின் உச்ச நிலைக்கு வந்திருக்கும் கோடி அற்புதரும், பாதுகாவலருமான, புனித அந்தோனியார் ஆலயம் மேலும் மேலும் வளர்ச்சியடைய, பங்கு மக்கள் ஆன்மீக வாழ்வில் நிலைகொள்ள வன்னிப் பிரதேசம், சகோதரத்துவம், ஒற்றுமை, சமாதானம் ஆகியவற்றில் ஓங்கி வளர எங்கும் தேவ அருள் நிரம்பி மக்கள் அனைவரும் அமைதியுடன் வாழ புனித அந்தோனியார் மூலமாக இறைவனை வேண்டுவோம்.

சுபம்